
**ஆகஸ்ட் - 15**

# TNPSC துளிகள்

- ❖ நகர்ப்புற மக்களுக்கு வன நில உரிமைச் சான்றிதழ்களை வழங்கிய நாட்டின் முதல் மாநகராட்சி மன்றமாக சத்தீஸ்கரின் ஜகதல்பூர் மாறியுள்ளது.
- ❖ அகில இந்திய கைவினைப் பொருட்கள் மற்றும் கைத்தறி வாரியங்களுக்குப் பிறகு ஜவுளித் துறை அமைச்சகம் அகில இந்திய விசைத்தறி வாரியத்தைக் கலைத்து உள்ளது.
- ❖ பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் இருக்கும் 50 மீட்டருக்குள் ஆரோக்கியமற்ற உணவு விற்பனையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையமானது சமீபத்தில் அறிவித்து உள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி


Positive signs
How Tamil Nadu's economy has fared over the years

| Year | Value of GSDP (₹ in cr.) | Growth rate (%) | National average growth rate (%) |
|---|---|---|---|
| 2012-13 | 7,91,824 | 5.37 | 5.5 |
| 2013-14 | 8,51,976 | 7.6 | 6.4 |
| 2014-15 | 8,93,915 | 4.92 | 7.4 |
| 2015-16 | 9,67,562 | 8.24 | 8 |
| 2016-17 | 10,36,762 | 7.15 | 8.3 |
| 2017-18 | 11,25,793 | 8.59 | 7 |
| 2018-19 | 12,15,307 | 7.95 | 6.1 |
| 2019-20 | 13,12,929 | 8.03 | 4.2 |

■ Against the all-India average figure of 4.2% last year, the State's performance – 8.03% – was almost double the former

*Note: All the figures have been calculated at constant prices, keeping 2011-12 as the base year*

Source: Central Statistics Organisation, RBI and Tamil Nadu government

- ❖ தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளாக தேசிய சராசரியை விட அதிகப் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை தமிழகம் அடைந்து வருகிறது.
- ❖ கடந்த ஆண்டின் அகில இந்திய சராசரி விகிதமான 4.2% என்ற விகிதத்திற்கு எதிராக, நமது மாநிலத்தின் செயல்திறன் (8.03%) கிட்டத்தட்ட இரு மடங்காக

உள்ளது.

- 2011-12 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாக வைத்து, நிலையான விலையில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தித் தரவுகளின் கணக்கீடானது செய்யப் பட்டு உள்ளது.
- 2019-20 ஆம் ஆண்டில் தனிநபர் வருமானத்தைப் பொருத்தவரை (நிகர மாநில உள்நாட்டு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு), தமிழ்நாட்டில் இது ரூபாய் 1,53,853 ஆகும். அகில இந்திய அளவில் இது ஆறாவது இடமாகும்.
- 2018-19 ஆம் ஆண்டில், இது ரூபாய் 1,42,941 ஆக இருந்தது. அதாவது இந்திய அளவில் இது 12வது இடத்தில் இருந்தது.
- மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பைப் பொருத்தவரை, மாநிலத்தின் தரவரிசையில் மகாராஷ்டிராவுக்கு அடுத்தபடியாக தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.
- 2019-20 ஆம் ஆண்டில், இது முதல் இடத்திற்குச் சென்றது, இதற்குக் காரணம் மேற்கு மாநிலமான மகாராஷ்டிராவின் தரவுகள் கிட்டாததாக இருக்கலாம்.
- 2019-20 ஆண்டிற்கான முன்கூட்டியே மதிப்பீடுகளின்படி, முதன்மைத் துறையின் வளர்ச்சி விகிதம் 6.08% ஆகவும், சேவைத் துறையின் வளர்ச்சி விகிதம் 6.63% ஆகவும் உள்ளது.
- இரண்டாம் நிலைத் துறையானது இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்துள்ளது (10.02%).
- இரண்டாம் நிலைத் துறையில், உற்பத்தி மற்றும் கட்டுமானத் துறைகள் முறையே 10.27% மற்றும் 10.49% என்ற இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தைக் கொண்டு உள்ளன.
- முதன்மைத் துறையினுள் கூட, விவசாயப் பிரிவு 2018-19 ஆம் ஆண்டில் 5.8% ஆக இருந்த வளர்ச்சியை விட இந்த முறை அதிக வளர்ச்சி விகிதத்தை (7.43%) பதிவு செய்து உள்ளது.
- முதன்மை நிலை, இரண்டாம் நிலை மற்றும் சேவைத் துறைகளுக்கான முந்தைய ஆண்டின் புள்ளி விவரங்கள் முறையே 8.49%, 6.49% மற்றும் 7.83% ஆகும்.

# தேசியச் செய்திகள்


## இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவுச் சந்தைப்படுத்துதல் மேம்பாட்டுக் கூட்டமைப்பை நிறுவிய நாள்

- இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவுச் சந்தைப்படுத்துதல் மேம்பாட்டுக் கூட்டமைப்பின் 33வது நிறுவிய நாளானது 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 ஆம் தேதி அனுசரிக்கப்பட்டது.

- இது பழங்குடியினரால் உற்பத்தி செய்யப்படும் சிறு வன உற்பத்திப் பொருள் மற்றும் உபரி வேளாண் உற்பத்தி ஆகியவற்றின் வர்த்தகத்தை நிறுவனமயமாக்குவதன் மூலம் நாட்டில் பழங்குடியினரின் சமூகப் பொருளாதார நிலைமையில் வளர்ச்சியைக் கொண்டு வர ஏற்படுத்தப்பட்ட ஒரு தேசிய அளவிலான கூட்டுறவு அமைப்பாகும்.
- இது 1987 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது பழங்குடி விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.

## ராம மந்திர் கட்டுமானத்திற்கான அடித்தளம்

- 5 ஆகஸ்ட் 2020 அன்று ஒரு மிகப்பெரிய விழாவாக இக்கோயில் கட்டுமானம் அதிகாரப் பூர்வமாக மீண்டும் தொடங்கியது.
- அயோத்தியில் கட்டப்படும் ராமர் கோயிலுக்கு மோடி அவர்கள் அடித்தளம் அமைத்தார்.
- அயோத்தியாவில் ராம ஜன்ம பூமியைப் பார்வையிட்ட முதல் பிரதமர் இவரே ஆவார்.
- அனுமான் சன்னதியான ஹனுமான் கர்ஹியைப் பார்வையிட்ட முதல் பிரதமரும் இவரே ஆவார்.
- அயோத்தியில் உள்ள ராம ஜன்ம பூமியில் அமைக்கப்படவுள்ள இந்த பிரம்மாண்டமான கோயிலானது நகரா பாணியிலான கோயில் கட்டிடக் கலையினைப் பின்பற்றும்.
- நகரா பாணி கோயில் கட்டிடக் கலையானது வட இந்தியாவில் காணப்படுகிறது.




# பொருளாதாரச் செய்திகள்

## விவசாய உள்கட்டமைப்பு நிதி

- வேளாண் உள்கட்டமைப்பு நிதியத்தின் கீழ் 1 லட்சம் கோடி ரூபாய் நிதி வசதியைப்

பிரதமர் தொடங்கி வைத்தார்.

- இது வேளாண் தொடக்க நிறுவனங்கள், தொழில்முனைவோர், உழவர் குழுக்கள், தொழில்நுட்ப வீரர்கள் முதலியோருக்கு அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் வேளாண் சொத்துக்களை வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும்.
- 2020 ஆம் ஆண்டின் ஜூலை மாதத்தில், மத்திய அமைச்சரவையானது ரூ. 20 லட்சம் கோடி ஊக்கத் தொகுப்பின் ஒரு பகுதியாக இந்த வேளாண் உள்கட்டமைப்பு நிதிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## TRAFFIC அமைப்பின் சிறுத்தைகள் பற்றிய ஆய்வு

- 'ஸ்பாட்டட்' (SPOTTED) என்ற தலைப்பில் 'சட்டவிரோத வனவிலங்கு வர்த்தகம்: நடந்து கொண்டிருக்கும் வேட்டையாடுதல் மற்றும் இந்தியாவில் சிறுத்தைகளின் சட்டவிரோத வர்த்தகம் பற்றிய பார்வை' என்ற ஒரு ஆய்வுக் கட்டுரையை TRAFFIC இந்தியா நிறுவனம் வெளியிட்டுள்ளது.
- இந்தியாவில் 2015-2019 ஆண்டிற்கு இடையில் மொத்தம் 747 சிறுத்தை இறப்புகளில் 596 சிறுத்தைகள் சட்டவிரோத வனவிலங்கு வர்த்தகம் மற்றும் வேட்டையாடுதல் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாக இருக்கிறது.
- உத்தரகண்ட் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் இருந்து அதிக எண்ணிக்கையிலான வேட்டையாடுதல் நடவடிக்கைகள் பதிவாகியுள்ளன.
- வனவிலங்கு வர்த்தகக் கண்காணிப்பு வலையமைப்பான TRAFFIC என்பது பல்லுயிர்த் தன்மை மற்றும் நிலையான வளர்ச்சி ஆகிய இரண்டின் பின்னணியில் வன விலங்குகள் மற்றும் தாவரங்களின் வர்த்தகத்தில், உலகளவில் செயல்படும் ஒரு முன்னணி அரசு சாரா அமைப்பாகும்.
- இது இயற்கைக்கான உலகளாவிய நிதியம் மற்றும் இயற்கைப் பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் ஆகியவற்றின் ஒரு மூலோபாயக் கூட்டணியாக 1976 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★